செ. கு. எண்: 020 நாள்: 09.02.2019

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி K.பழனிசாமி அவர்களின்**

**அறிக்கை –9.2.2019**

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், அருள்மிகு ஆஞ்சநேயர் சுவாமி திருக்கோயிலில், 27.1.2019 அன்று கைங்கர்யப் பணியில் ஈடுபட்டிருந்த, நாமக்கல் வட்டம், கோட்டை பிரதான சாலையைச் சேர்ந்த திரு. ராதாகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு. வெங்கடேசன் என்பவர் நிலைதடுமாறி கீழே விழுந்ததில், பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 28.1.2019 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

கைங்கர்யப் பணியின் போது, நிலைதடுமாறி கீழே விழுந்து உயிரிழந்த திரு. வெங்கடேசன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. வெங்கடேசன் அவர்களின் குடும்ப நிலையினைக் கருத்திற்கொண்டு, **சிறப்பினமாக அவருடைய குடும்பத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் திருக்கோயில் நிதியிலிருந்து நிவாரணமாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.**

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**